சுருக்கம்

நகராட்சி நிர்வாகம் – திருப்பூர் மற்றும் ஈரோடு நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்தியது – உள்கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்வது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந6) துறை

அரசாணை (2ப) எண்.247 நாள்: 28.12.2007

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.160, ந.நி(ம) கு.வ துறை, நாள் 28.11.2007.
2. அரசாணை (நிலை) எண்.161, ந.நி(ம) கு.வ துறை, நாள் 28.11.2007.
3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண்.ந.க.எண்.67317/2007/பி3, நாள் 06.12.2007.

-----

ஆணை:

திருப்பூர் மற்றும் ஈரோடு நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்தி, 17.11.2007 அன்று இரண்டு அவசர சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த அவசர சட்டங்கள் 1.1.2008 முதல் செயல்பாட்டிற்கு வரும் என்று அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. 1.1.2008 முதல் செயல்பட துவங்க உள்ள இந்த மாநகராட்சிகளில் சில அடிப்படை வசதிகளை உடனடியாக மேம்படுத்த ஏதுவாக அரசு ஒவ்வொரு மாநகராட்சிக்கும் ரூ.10 கோடி வழங்க கேட்டு ஈரோடு மற்றும் திருப்பூர் நகராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர் என்றும், மேற்கண்ட நகராட்சிகள் கேட்டுக் கொண்டுள்ளவாறு அடிப்படை வசதிகளை மேம்படுத்திட அரசு மான்யம் வழங்கிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

2. இதனை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தபின், 1.1.2008 முதல் செயல்பட துவங்க உள்ள திருப்பூர் மற்றும் ஈரோடு மாநகராட்சிகளில் சில உள்கட்டமைப்பு வசதிகளை உடனடியாக மேம்படுத்த 'ஒரு முறை அரசு மானியமாக' ஒவ்வொரு மாநகராட்சிக்கும் தலா ரூ.10 கோடி மதிப்பீட்டில் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செய்ய 50% மானியமாக ஒவ்வொரு மாநகராட்சிக்கும் ரூ.5 கோடி (ஐந்து கோடி மட்டும்) வழங்கலாம் எனவும், மீதமுள்ள 50% செலவினங்களை அந்தந்த மாநகராட்சிகளே தங்களது சொந்த நிதியிலிருந்தோ அல்லது வேறு நிதியிலிருந்தோ செய்யலாம் என்றும் முடிவு செய்து அவ்வாறே அரசு இவண் ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2217 – நகர்ப்புற வளர்ச்சி – 05 –ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள் 191. மாநகராட்சிகளுக்கு நிதியுதவி – I திட்டத்தில் சேராதது – AA மாநகராட்சி களுக்கு உதவி மானியங்கள் – 09 உதவி மானியங்கள் – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் (கு.தொ.கு 2217 05 191 AA 0936)"

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் புதிய திட்டப் பணிகள் குறித்ததாகும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை பெறும் வரையில் இச்செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இத்தொகையினை முன்பணமாக பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இந்த ஆணையின் இருபடிகளை இணைத்து தவறாது நிதி (வ.செ.1) துறைக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2007– 2008 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டில் சேர்த்து சட்டமன்ற பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு உரிய கருத்துருக்களை நிதி (BG.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. நகராட்சி நிர்வாக ஆணையர், மேற்படி தொகையினைப் பெற்று திருப்பூர் மாநகராட்சி மற்றும் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர்களுக்கு வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை அ.சா.எண்.84582/நநி(ம)குவ/07 நாள் 28.12.2007ன்படி நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1599 ( ஆயிரத்து ஐநூற்று தொண்ணூற்று ஒன்பது)

( ஆளுநரின் ஆணைப்படி )

கே.தீனபந்து
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5
ஆணையர், ஈரோடு நகராட்சி, ஈரோடு.
ஆணையர், திருப்பூர் நகராட்சி, திருப்பூர்.
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 5
நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை –9
நிதி (BG.I, BG.II,MAWS) துறை, சென்னை –9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( அந2) துறை, சென்னை – 9

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர் 28/12/07

இணைப்பு – I

அரசால் ஒருமுறை வழங்கப்படும் மானியத்தொகை ரூ.10 கோடி திட்டத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள்

திருப்பூர் மாநகராட்சி

| வ. எண். | பணிகளின் விவரம் | நீளம் / எண்ணிக்கை | தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் | – | 450.00 |
| 2. | சாலை மேம்பாட்டுப்பணிகள் | 20.96 கிமீ | 300.00 |
| 3. | சாலையின் மையத்தில் (5 x 34 வாட்ஸ் மின்சக்தி சேமிப்பு) இரட்டை எண்ணிக்கை தெருவிளக்குகள் கொண்ட மின்கம்பங்கள் நிறுவுதல் | 12.200 கிமீ | 198.75 |
| 4. | உயர்மின் கோபுர விளக்குகள் அமைத்தல் | 10 எண்ணிக்கை | 60.00 |
| 5. | பூங்கா மேம்பாட்டுப் பணிகள் செய்தல் | 2 எண்ணிக்கை | 20.00 |
| 6. | கம்பியில்லா தந்தி வசதி செய்தல் | 1 எண்ணிக்கை | 15.00 |
| 7. | குமரன் நினைவு மண்டபம் அழகுபடுத்துதல் | 1 எண்ணிக்கை | 2.00 |
| | மொத்தம் | | 1045.75 |

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர் 28/12/07

## இணைப்பு – II

அரசால் ஒருமுறை வழங்கப்படும் மானியதொகை ரூ.10 கோடி திட்டத்தில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள்
ஈரோடு மாநகராட்சி

| வ. எண். | பணிகளின் விவரம் | தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நகரின் முக்கிய சாலைகளில் உயர் கோபுர மின்விளக்குகள் அமைத்தல் | 55.00 |
| 2. | ஈ.வி.என்.சாலை, சத்தி சாலைகளனில் மையத்திட்டு விளக்குகள் அமைத்தல் | 20.00 |
| 3. | மாநகராட்சிக்கு புதிய வாகனங்கள் வாங்குதல் (மூன்று கார்கள், 1 ஜீப், 1 பொக்லைன் மற்றும் 1 டிராக்டர் டோசர்) | 74.00 |
| 4. | மாநகராட்சி தகவல் தொடர்புக்கு ஒயர்லெஸ் தகவல் தொடர்பு சாதனம் அமைத்தல் | 30.00 |
| 5. | பேருந்து நிலையத்தில் சுகாதார வளாகம், பயணிகள் ஓய்வு அறை, இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் சுற்று சுவர் அமைத்தல் | 300.00 |
| 6. | புதிய மாநகராட்சி அலுவலகம் மற்றும் மாமன்ற கூடம் அமைத்தல் | 300.00 |
| 7. | காந்திஜி சாலையில் உள்ள நகராட்சி மருத்துவமனையினை 24 மணி நேரமும் செயல்படும் வண்ணமும் மேம்படுத்துதல் | 200.00 |
| 8. | பெரியார் நகர் நகராட்சி நூலக கட்டிடத்தில் முதல் தளம் மற்றும் கூடுதல் வசதிகள் செய்தல் | 20.00 |
| 9. | மாநகராட்சி பகுதியிலுள்ள முக்கிய இடங்களில் ஏற்கனவே உள்ள சோடியம் ஆவி விளக்குகளை புதிய FTL (Energy saving lights) விளக்குகள் அமைத்தல் | 20.00 |
| | | 1019.00 |

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர் 28/12/07